இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 04-12-2024

# எந்த மோடி சொல்வது உண்மை?

மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. அரசு, இந்திய நாட்டின் நிதி நிலைமையை தரை மட்டத்துக்கு இறக்கிய வரலாற்று வேதனையைச் செய்துள்ளது. இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது 5.4 விழுக்காடு என்கிற அளவில் சரிந்துள்ளது. இரண்டு ஆண்டுகள் இல்லாத அளவுக்கு சரிந்துள்ளது. இதனைச் சொல்வதும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தான்.

ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறையின் கீழ் செயல்படும் தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்.எஸ்.ஓ.) ஒரு செய்திக் குறிப்பை இரண்டு நாட்களுக்கு முன்னால் வெளியிட்டுள்ளது. **“கடந்த 2023-24 ஆம் ஆண்டின் ஜீலை - செப்டம்பர் காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.1 விழுக்காடாக இருந்தது. இந்த நிகழ் காலாண்டில் ஜீலை - செப்டம்பர் காலாண்டில் 5.4 விழுக்காடாகச் சரிந்துள்ளது. இதற்கு நுகர்வு மற்றும் உற்பத்தித் துறையில் ஏற்பட்ட சரிவே காரணம்”** என்று அந்த அறிக்கை சொல்கிறது.

2022-23 ஆம் நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் (2022 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் டிசம்பர் வரை) நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4.3 விழுக்காடு குறைந்து இருந்தது. அதன்பிறகு இப்போது 5.4 விழுக்காடாகக் குறைந்துள்ளது. ஒன்றிய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகராக இருக்கும் வி.அனந்த நாகேஸ்வரன், **“பொருளாதார வளர்ச்சியில் சரிவு ஏற்பட்டுள்ளது ஏமாற்றம் அளிக்கிறது”** என்று சொல்லி இருக்கிறார். இந்த ஏமாற்றத்துக்கு என்ன காரணம் என்பதை வெளிப்படைத் தன்மையுடன் விவாதிக்கும் நிலையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இல்லை.

**“நாட்டின் பொருளாதார செயல்திறன் அழிவை எதிர்கொண்டு வருகிறது. ஆனால் பிரதமர் மோடி மிகைப்படுத்தப்பட்ட பிம்பங்களை உருவாக்கி வருகிறார். தன்னை மனிதப் பிறவியல்ல என்று கூறிக் கொள்ளும் பிரதமரும், அவரது புகழ்பாடும் சகாக்களும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி சரிவுக்கான காரணத்தை உள்நோக்கத்துடன் புறக்கணிக்கின்றனர்”** என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெயராம் ரமேஷ் சொல்லி இருக்கிறார். ‘தொழிலாளர்களுக்கான ஊதிய வளர்ச்சியில் நிலவும் மந்த நிலையே பொருளாதார வளர்ச்சி சரிவுக்கு காரணம்’ என்று நிதி தரவுகள் சேவை நிறுவனம் சொல்லிய அறிக்கையைச் சுட்டிக்காட்டி ஜெயராம் ரமேஷ் சொல்லி இருக்கிறார்.

இந்தக் காலாண்டில் நாட்டின் வளர்ச்சி 7 விழுக்காடாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி கணித்திருந்த நிலையில், 5.4 விழுக்காடுதான் கிடைத்துள்ளது. ரிசர்வ் வங்கியின் கணிப்பு பொய்யாகி உள்ளது. உற்பத்தி, சுரங்கத்துறையில் நிலவிய மந்தநிலையே பொருளாதார வளர்ச்சி குறைந்ததற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

கடந்த நிதியாண்டில் இதே காலத்தில் 14.30 விழுக்காடாக இருந்த உற்பத்தித் துறை வளர்ச்சியானது தற்போது 2.20 விழுக்காடாகவும், 11.10 விழுக்காடாக இருந்த சுரங்கத் துறை வளர்ச்சியானது 0.01 விழுக்காடாகவும் குறைந்ததே பொருளாதார வளர்ச்சி குறைய முக்கியக் காரணமாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

அமெரிக்க பிரிஸ்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர் அசோகா மோடி, ஒரு கட்டுரையை எழுதி இருக்கிறார். **“கடன் வளர்ச்சியைச் சார்ந்து இயங்கும் இந்தியா மலை முகட்டை நோக்கி பிரேக்குகள் பழுதான கார் பயணிப்பதைப் போன்றது”** என்று சொல்லி இருக்கிறார்.

**“வேலை வாய்ப்புகள் நிறைந்த வளர்ச்சியை உருவாக்காமல் மொத்த உள்நாட்டு உற்பத்தியை உயர்த்திக் காட்ட நிதிச் சேவைத் துறையில் மட்டும் கவனம் செலுத்தப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு நிதித்துறை வளர்ச்சியின் மூலம் பெறப்பட்டுள்ளது. விரைவான கடன் அதிகரிப்பும் மிகை மதிப்பீடு செய்யப்பட்ட மாற்று விகிதமும் ஒரு ஆபத்தான கலவை என்பதை வரலாறு தெளிவாக்குகிறது. ‘நிதிச் சந்தை மட்டுமே வளர்ச்சியைத் தூண்டும், மனித வள அபிவிருத்தியின் குறைபாட்டைக்களையும்’ என்பது மத்திய ஆட்சியாளர்களின் கண்மூடித் தனமான கனவு. நிதி நெருக்கடி வேலைவாய்ப்புகளை விழுங்கி விடும்.”** என்று சொல்லி இருக்கிறார். அதைத்தான் இப்போது புள்ளிவிபரங்களின் மூலமாகப் பார்க்கிறோம்.

தொழிலாளர்களின் நலத் திட்டங்களைக் குறைத்து விட்டு வர்த்தக நிறுவனங்களுக்கான வரிச் சலுகைகளையும், மானியங்களையும் அதிகரித்தால் இந்தியப் பொருளாதாரம் வளர்ந்து விடும் என்று பா.ஜ.க. அரசு நினைத்தது. அது பொருளாதாரத்தை வளர்க்காது என்பது இப்போது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது எதையும் தெரியாமல், ‘அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியர்களின் தனிநபர் வருமானம் இரு மடங்காக உயரும்’ என்று சொல்லி இருக்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். வரும் பத்தாண்டுகளில் சாமானியர்களின் வாழ்க்கைத் தரம் செங்குத்தான உயர்வை காணும் என்றும் அவர் சொல்லி இருக்கிறார். “கடந்த பத்து ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் காரணமாகவும் கோவிட் அதிர்ச்சி மங்குவதன் காரணமாகவும் வரும் ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இன்னும் சிறப்பாக வெளிப்படும். இதன் காரணமாக பொருளாதார வளர்ச்சி மேம்பாடுகள் தொடரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்” என்று ஒரு மாதத்துக்கு முன் பேசினார் நிர்மலா சீதாராமன். அக்டோபரில் பேசினார். நவம்பரில் வந்துள்ள புள்ளிவிபரம் அப்படி இல்லை என்று சொல்கிறது.

**‘இந்தியா வளர்கிறது’ என்கிறார் பிரதமர் நரேந்திர மோடி. ‘பிரேக் பிடிக்காத காரில் செங்குத்தாகச் செல்கிறீர்கள்’ என்கிறார் அசோகா மோடி.**

**எந்த மோடி சொல்வது உண்மை?**

## திருவண்ணாமலையில்

# ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆய்வு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வின் போது - மண் சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் நிதி வழங்கப்படும் என்று அறிவிப்பு!




திருவண்ணாமலை, டிச. 4-

திருவண்ணாமலை மாவட்டத்தில் கனமழை பெய்ததால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

இதனிடையே, திருவண்ணாமலையில் மகா தீபம் ஏற்றும் மலை அடிவாரத்தில் உள்ள வ.உ.சி. நகர், 11-ஆவது தெருவில் ஞாயிற்றுக்கிழமை மாலை திடீரென மண் சரிவு ஏற்பட்டது. தகவலறிந்த போலீஸார், தீயணைப்புத் துறையினர் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மண் சரிவு ஏற்பட்ட பகுதியில் இருந்த சுமார் 200 பேர் மீட்கப்பட்டு, நகராட்சிப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், மலையில் வீடு கட்டி வாழ்ந்து வந்த ராஜ்குமார், அவரது மனைவி மீனா, மகன் கௌதம், உறவினர்கள் மகா, தேவிகா, விநோதினி உள்பட மொத்தம் 7 பேர் சிக்கியிருப்பதாக தகவல் தெரிய வந்தது.

இந்த நிலையில், மாலை 7.30 மணி நிலவரப்படி 6 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் கள நிலவரங்கள் தெரிவிக்கின்றன. மீட்புப்பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்நிலையில் திருவண்ணாமலையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மண் சரிவில் சிக்கி பலியானவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

இந்நிகழ்வின் போது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மற்றும் அரசு அதிகாரிகள் கழக முன்னணியினர் உடனிருந்தனர்.

## அமைச்சர் எ.வ.வேலு நடத்தி வைக்கிறார் - எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. தலைமை!

# தேசூர் அ.செல்வம் - ஆர்.கிருஷ்ணவேணி எம்.சி. இல்லத் திருமணம்!

## கு.பிச்சாண்டி - எ.வ.வே.கம்பன் - செஞ்சி கே.எஸ்.மஸ்தான் - சீதாபதி - அம்பேத்குமார் - நிர்வாகிகள் வாழ்த்து!

*திருவண்ணாமலை டிச. 4 -*

*முன்னாள் தலைமை பொதுக்குழு உறுப்பினர் - மாவட்டப் பிரதிநிதி தேசூர் அ.செல்வம் - தேசூர் பேரூராட்சி 10-வது வார்டு கவுன்சிலர் ஆர்.கிருஷ்ணவேணி ஆகியோரது இல்ல திருமண விழாவை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எ.வ. வேலு, எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. தலைமையில் நடத்தி வைக்கிறார்.*

*தேசூர் அ.செல்வம் - ஆர்.கிருஷ்ணவேணி ஆகியோரது புதல்வர் டாக்டர் எஸ்.கலாநிதி, திருக்கோவிலூர் சந்தப்பேட்டை எம். இரவி - பி.இராஜேஸ்வரி ஆகியோரது மகள் டாக்டர் ஆர்.ராதிகா ஆகியோரது திருமணம் நாளை (5.12.2024 - வியாழன்) காலை 7.30 மணி முதல் 9.00 மணிக்குள்ளாக வி.கே.ஆர். சாந்தி பேலஸ் தேசூரில் நடைபெறுகிறது.*

*மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன் எம்.பி. தலைமை தாங்குகிறார். சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் எ.வ.வே. கம்பன், செஞ்சி கே.எஸ். மஸ்தான் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஆர். சீத்தாபதி, எஸ்.அம்பேத்குமார் எம்.எல்.ஏ., புதுவை எம்.எல்.ஏ. இரா.சிவா, மாநில பொறியாளர் அணி கு.கருணாநிதி, பேரூராட்சித் தலைவர் இராதா ஜெகவீரபாண்டியன், நகரச் செயலாளர் டி.கே.மோகன், மாவட்ட மீனவரணி அமைப்பாளர் ஆர்.மனோகரன், நல்லாசிரியர் பி.இராஜவேலு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஓய்வு பெற்ற காவல் ஆய்வாளர் அ.அன்பழகன் வரவேற்கிறார்.*

*பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு மணவிழாவை நடத்தி வைத்து வாழ்த்துகிறார்.*

*மேலும் சி.என்.அண்ணாதுரை எம்.பி., எம்.கே.விஷ்ணுபிரசாத் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். சிவானந்தம், வ.அன்பழகன், ஓ.ஜோதி, மு.பெ.கிரி, மாவட்டப் பொறுப்பாளர் ப.சேகர், பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ., ஆ.வேல்முருகன் எம்.எல்.ஏ., கே.லோகநாதன், ஜெயராணி ரவி, என்.பாண்டுரங்கன், பார்வதி சீனுவாசன், டி.தட்சிணாமூர்த்தி, இரா. ஸ்ரீதரன், நிர்மலா கார்த்திவேல்மாறன், கார்த்திகேயன், எவரெஸ்ட் நரேஷ்குமார், எம்.துரை, சீனி.கார்த்திகேயன், டாக்டர் வி. முத்து, பா.போஸ், எதிரொலிமணியன், அ.தயாளன், எச்.ஜலால், ந.ராமச்சந்திரன், ஏ.சி.மணி, ஆர்.மோகனவேல், ஆர்.ராஜசேகர், எம்.பாபுவேல்முருகன், பால.ஆனந்தன், எம்.கே. மோகன், ந.ராமலிங்கம், ஏ. கே.மணி, எஸ்.பி.ஜே.கமலக்கண்ணன், த.நடராஜன், கே.வி.சேகரன், தா.தட்சணாமூர்த்தி, ஆரணிமாலா, எம். டி.ஆர்.நாதன், இரா.சேதுநாதன், ஆர்.மாசிலாமணி, மு.ந.சீதாபதிசொக்கலிங்கம், ஏ.எம்.காசி, டி.டி. இராதா, ஏ.சுந்தரேசன், ஆராஞ்சி ஆறுமுகம், பி. இளங்கோவன்,*

*சி.ஆர்.பெருமாள், கே.ஆர்.பி.பழனி, டி.வி. இராமு, கமலாட்சி இளங்கோவன், இந்திராஇளங்கோ, என்.எஸ்.பாரிவள்ள, கே. ஞானசேகர், டி.சதீஷ்குமார், க.சௌந்தராசன், ஆ.கோபிநாதன், எம்.செல்வம், எஸ். பழனிசாமி, கே.ராஜ மாணிக்கம், டி.வி.ஜி.இளங்கோவன், எம்.விநாயகமூர்த்தி, வேணி ஏழுமலை, சி.கே.அன்பு ராணிசண்முகம், சுதாமுருகன், டி.ஜி.பழனி, பி.மோதிலால், ஆர்.நந்தகோபால், எல்.அப்சர்லியாகத், மணியம்மைதேவன், கே.டி.ராமசாமி, டி.மனோகரன், செஞ்சி சிவா, அன்னை சீனுவாசன், டி.கே.முனியப்பன், வி.லட்சுமி, இ.மணிகண்டன், பி.காமராஜ், எஸ். கிஷோர்குமார், எச்.மதன்குமார், படூர்வெங்கடேசன், டி.என்.சௌரிராஜன், என். அம்சா, ஜி.தனசேகர், ஏ. என்.சம்பத், ஆர்.வெங்கடேஷ்பாபு, கே.விஸ்வநாதன், ஆர்.முருகன், வள்ளிமைந்தன், ஏ.நவாப்ஜான், ஜி.தினேஷ்குமார், எஸ். ஜாகீர்உசேன், வி. முருகன், இ.அருண், சந்திரன், கே.தீனதயாளன், எம்.எஸ். மாபு, ரீனா இளவரசி, ஆர். வாசுகிபாபு, பொன்னேரி சிவா, சி.மகேந்திரன், ஆர். வி.பாஸ்கர், திலகவதி செல்வராஜ், எல்.பி.நெடுஞ்செழியன், ஆர்.விஜயகுமார், கே. எஸ்.எம்.மொக்தியார் அலி மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.*

*தேசூர் பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த அ. மனோகரன், 7-வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் அ.சேகர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

## புயல் மழை! நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார்!

# திருவண்ணாமலை மாநகர் முழுவதும் ஏற்பட்டுள்ள சேதங்கள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

திருவண்ணாமலை, டிச.4 –

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) திருவண்ணாமலை வ.உ.சி நகரில் மண் சரிவு ஏற்பட்டு மீட்பு பணி நடைபெறும் இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர், தீபக் ஜேக்கப், மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, மாநில தடகளச் சங்க துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது : –

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெஞ்சல் புயல் கடக்கின்ற போது தொடர் மழை பெய்து வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 1965 ஆம் ஆண்டில் முதல் முதலில் இந்த அளவிற்கு மழை பெய்தது. ஆனால் 1965 ஆம் ஆண்டிற்கு பிறகு புயல் தாக்கத்துடன் இந்த அளவிற்கு மழை பெய்யவில்லை. அரசின் சார்பாக முதலமைச்சர் அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆணையிட்டதன் அடிப்படையில், நமது மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஏறத்தாழ 36 முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, திருவண்ணாமலையில் மட்டும் ஏறத்தாழ 150 நபர்கள் இந்த முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பிற இடங்களான ஆரணி, சேத்பட், கலசபாக்கம், கீழ்பென்னாத்தூர், தண்டராம்பட்டு ஆகிய பகுதிகளில் முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்டவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

### மலையடிவாரத்தில் மண் சரிவு!

தொடர் மழை காரணமாக திருவண்ணாமலை மலை அடிவாரத்தில் ஏற்பட்ட மண் சரிவின் காரணமாக வ.உ.சி நகர் பகுதியில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுவாக இந்த மலைப்பகுதி மண்ணும், கல்லும் கலந்த பகுதியாகும். இது வரையில் மலைச்சரிவு என்பது திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்பட்டதில்லை.

திருவண்ணாமலை மலை அடிவாரத்தில் ஏற்பட்ட மண் சரிவின் காரணமாக வ.சி நகர் பகுதியில் உள்ள நான்கு வீடுகளில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. முன்னதாக மழை எச்சரிக்கையாக மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக அந்தப் பகுதியில் இருந்த பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறுவுறுத்தி நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மலை அடிவாரத்தில் இருந்த ஒரு வீட்டில் மட்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 குழந்தைகள் உட்பட 7 நபர்கள் மலை சரிவில் சிக்கி உள்ளனர், அவர்களை மீட்கும் பணிகளில் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் 35 வீரர்களும், திருவண்ணாமலை மாவட்ட காவல் கமாண்டோ குழுவினர்50 வீரர்களும் மாநில மீட்பு படையினர்20 வீரர்களும், திருவண்ணாமலை ஆயுதப்படை காவலர்கள்40 நபர்களும், மேலும் காவல் துறை சார்பாக 60 நபர்களும் என காவல்துறை சார்பாக மொத்தம் 170 நபர்கள் மீட்பு மற்றும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் மலை அடிவாரத்தில் மண் சரிவுகள் ஏற்படும் அபாயம் உள்ளதால் அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் அனைவரையும் உடனடியாக வெளியேற்றி முருகையன் அருகாமையில் உள்ள திருமண மண்டபங்கள் உள்ளிட்ட இடங்களில் தங்கவைக்கவும், அவர்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு உத்தரவிட்டதை தொடர்ந்து, மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக அனைத்து நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், மழை வெள்ள பாதிப்புகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு, தேங்கியுள்ள நீரை உடனடியாக வெளியேற்றுவதற்கு வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித் துறை உள்ளிட்ட துறைச்சார்ந்த அலுவலர்கள் உரிய நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும் மாவட்டம் முழுவதும் நிவாரண முகாம்களில் உள்ள மக்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

அமைச்சர் எ.வ.வேலு மீட்பு பணி நடைபெறும் இடத்தினை பார்வையிட்டு, தொடர்ந்து திருவண்ணாமலை மாநகரப்பகுதி முழுவதிலும் ஏற்பட்டுள்ள சேதங்களை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

### நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டனர்!

திருவண்ணாமலை மலையடிவாரத்தில் இருந்த பொதுமக்களை கன மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமராவதி முருகையன் நகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள வேங்கிக்கால் ஏரியில் இருந்து நீர் வெளியேறுவதையும், தொடர்ந்து, திருவண்ணாமலை – திண்டிவனம் சாலையில் நீர் வெளியேறுவதையும், சமுத்திரம் ஏரி நிரம்பி நீர் வெளியேறுவதை பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்துறை அமைச்சர் எ.வ. வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், மாநகராட்சி ஆணையர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (02.12.2024) திருவண்ணாமலை சமுத்திரம் ஏரி நிரம்பி நீர் வெளியேறுவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர், தீபக் ஜேக்கப், மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, மாநில தடகளச் சங்க துணைத் தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.